ஓவியப் போட்டிகளில் நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரி
மாணவியர் சிறப்பிடம்

இந்திய அரசின் 75-வது குடியரசு தின விழாவின் (ஆசாதி கா அம்ரித் மகோட்சவ்) ஒரு பகுதியாக நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழாய்வுத் துறை, உள்தர உத்தரவாத மையம் மற்றும் கல்லூரியின் புத்தாக்க மையம் ஆகியவை இணைந்து சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் என்ற தலைப்பிலான ஓவியப் போட்டியினை அண்மையில் நடத்தியது.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா 19.12.2022 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் மூன்றாம் ஆண்டு பிகாம் பாடப்பிரிவு மாணவி கே. சித்தார்த்தி முதல் பரிசினையும், இரண்டாம் ஆண்டு பிகாம் பாடப்பரிவு மாணவி எஸ். வொய். இலக்கியா இரண்டாம் பரிசினையும், மூன்றாம் ஆண்டு பிஎஸ்சி கணினி அறிவியல் பாடப்பிரிவு மாணவி கே. கோபிகா மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

சுதந்திரமும், தமிழகமும், விடுதலைப் போரில் தமிழக சுதந்திர வீரர்களின் பங்கு, ஆங்கிலேயர் எதிர்ப்பில் தமிழக விடுதலை வீரர்களின் தியாகம், தமிழகத்தில் இருந்து புறப்பட்ட விடுதலை வீராங்கனைகள் ஆகிய கருப்பொருட்களை மையமாகக் கொண்டு இந்த ஓவியப் போட்டிகள் நடைபெற்றது.

இப்பாராட்டு விழாவில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே செங்கோடன், செயலர் கே. நல்லுசாமி, செயல் இயக்குநர் அருணா செல்வராஜ், முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன், இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன், துறைத்தலைவர்கள் டி. கே. அனுராதா, ஆர். சாவித்திரி, எம். சசிகலா, ஆர். நவமணி, என். இளமதி, என். தங்கமணி, ஆர். மலர்விழி மற்றும் கல்லூரிப் பேராசிரியைகள் பி லேனா, ஜே. பாரதி, எஸ். பூர்ணிமா, கே. மேகலா ஆகியோர் கலந்து கொண்டு ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியரை பாராட்டினர்.

19.12.22

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.